**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA COURT, PERAMBALUR.**

| | |
|---|---|
| **Calendar** | |
| **Miscellaneous** | DVC. No.01/2020 |
| **Preliminary Register** | |
| **Sessions** | |

**DEPOSITION OF WITNESS FOR** Prosecution ம.சா.1<br>Defence<br>Court

| | |
|---|---|
| **Name** | திரு.அமுதா |
| **Father's/Husband Name** | திரு. சுப்ரமணியன் |
| **Village** | வி.களத்தூர் |
| **Taluk** | வேப்பந்தட்டை |
| **Age** | 55 /2022 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 08.09.2022.**

**மாண்புமிகு மகிளா நீதிமன்றம் உத்தரவுபடி எதிரி மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை :-**

**01.** நான் மனு தாக்கல் செய்த போது என் மகனுடன் வசிப்பதாக குறிப்பிட்டுள்ளனா என்றால் சரிதான். எனக்கு என்று குடும்ப அட்டை, ஆதார் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை ஆகியவை இருக்கின்றனா என்றால் சரிதான். மேற்படி ஆவணங்கள் 1ம் எதிர்மனுதார் சுப்ரமணியன் வீட்டு விலாசத்தில் இல்லை என்றால் 2010 வரை அவருடைய வீட்டு விலாசத்தில் தான் இருந்தது.

02.அவர்கள் என் பெயரை நீக்கி விட்டதால் எறையூர் விலாசத்தில் இந்த ஆவணங்களை விண்ணப்பித்து பெற்றுக்கொண்டேன். மேற்சொன்ன ஆவணங்கள் என் மகன் பாலமுருகனின் எறையூர் விலாசத்தில் உள்ளனா என்றால் உள்ளனா. பாலமுருகன் எறையூரில் சொந்த வீடு கட்டி வாடகைக்க வீடுகள் விட்டுள்ளார்.

03. அதில் ஒன்றில்தான் நான் குடியிருக்கிறேன் என்றால் சரியல்ல. என் மகன் எறையூரில் 2 வீடுகள் கட்டியுள்ளார் என்றால் சரிதான். என் மகன் எறையூரில் சர்வே எண்.42/58 என்ற இடத்தை வாங்கியுள்ளரா என்றால் வாங்கி இருந்தார். அதை விற்றுவிட்டார்.

04. என் மகன் பாலமுருகன் அந்த இடத்தை விற்றகவில்லை என்றால் சரியல்ல. வி.களத்தூரில் என் மகன் இடம் வாங்கி போட்டுள்ளரா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. என் மகன் 2 கார்கள் வைத்துள்ளார் என்றால் சரிதான். நான்கு இருசக்கர வாகணங்கள் வைத்துள்ளார் என்றால் சரியல்ல. ஒன்றுதான் வைத்துள்ளார்.

05.என் மகன் வெளிநாட்டிற்கு தங்கம் வாங்கி விற்கும் தொழில் செய்கிறார் என்றால் இல்லை. என் மகன் வி.களத்தூர், லப்பைக்குடிகாடு, தொழுதூர் ஆகிய இடங்களில் கம்பியூட்டர் டிரைனிங்சென்டரை ஆட்கள் பணி அமர்த்தி நடத்திவருகிறார் என்றால் வி.களத்தூரில் மட்டும் வைத்துள்ளார்.

06.வி.களத்தூர் வண்ணாரம்பூண்டியில் நானும் என் மகனும் பெரிய ே ஹாட்டல் வைத்து பல ஆட்களை பணி அமர்த்தி தொழில் நடத்தி வந்தோம் என்றால் 6 மாதம் நடத்தினோம். 3 மாதங்களா நஷ்டம் ஏற்பட்டதால் ே ஹாட்டலை நிறுத்திவிட்டோம். இந்த ஹோட்டலை லீஸ்க்கு விட்டுவிட்டோம் என்றால் இல்லை. என் மகன் கோடி கணக்கில் சம்பாதிப்பதால் இந்த ஹோட்டலை லீஸ்க்கு விட்டுவிட்டார் என்றால் சரியல்ல.

07.3ம் எதிர்மனுதாரர் 1,2 எதிர்மனுதாரரின் மகன் என்றால் சரிதான். 1,2 எதிர்மனுதாரர்களுக்கு திருமணம் நடந்ததை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். 30 வருடங்களுக்கு மேலாக 1ம் எதிர்மனுதாரரின் குடும்ப அட்டை மற்றும் வாக்களார் அடையாள அட்டையில் 2ம் எதிர்மனுதாரரின் பெயர்தான் மனைவி என்ற இடத்தில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

08. 3ம் எதிர்மனுதாரர் சுரேஷ் வெளிநாட்டில் இன்ஜினியராக இருக்கிறாரா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரரின் தந்தை ரத்தினம் நத்தம் பொரம்போக்கை ஆக்கிறமித்து அனுபவித்து வந்த இடத்தில் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது சகோதரார்கள் கூட்டாக வீடுகட்டி வசித்துவருகிறார்கள் என்றால் சரியல்ல. என் மாமனார் பெயரில் கிரையம் வாங்கிய இடத்தில் தான் குடிஇருக்கிறார்கள்.

09. அந்த 3பேர் கட்டிய வீட்டில் ரத்தினத்தின் மகளுக்கு பங்கு எதுவும் இல்லை. அவர்கள் அந்த வீட்டு பக்கம் அனுபவம் செய்யவும் இல்லை என்றால் தவறு. 1ம் எதிர்மனுதாரரின் அக்கா சந்திராவின் மகளை என் மகன் திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான்.

10.1ம் எதிர்மனுதாரரிடம் பிரச்சனை செய்யவேண்டும் என்பதற்காக ஒரு ஆவணத்தை சந்திரா தயார் செய்துள்ளார் என்றால் சரியல்ல. சந்திரா மோசடியாக செய்த ஆவணத்தை எதிர்த்து 1ம் எதிர்மனுதாரர் சிவில் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் திருமணத்திற்கு முன்பு தனது வலது கை முறிவு ஏற்பட்டு செயல் இழந்த நிலையில் இருந்தார் என்றால் சரிதான். அது தெரிந்து தான் திருமணம் செய்துகொண்டேன்.

11. திருமணம் செய்து சில நாள் கூட அவருடன் நான் வாழாமல் சென்று விட்டுடேன் என்றால் சரியல்ல. நான் அவருடன் திரும்ப வாழவராமல் இருந்ததால் பெண்ணகோணத்தில் பஞ்சாயத்து பேசி அதில் 1ம் எதிர்மனுதாரர் எனக்கு 1,00,000/- ரூபாய் கொடுத்து அங்கேயே விவாகமுறிவு ஏற்பட்டது என்றால் சரியல்ல. அதன் பிறகு நான் எங்க அம்மாவீட்டில் தங்கிவிட்டேன் என்றால் சரியல்ல.

12. முதல்விசாரணையிலும் மனுவிலும் நான் என் தாயார் வீட்டிலேயே தங்கி என் மகனை என் சகோதரர்கள் உதவியுடன் படிக்க வைத்தேன் என்று சொல்லியுள்ளேன் என்றால் என் அம்மா வீட்டிலும் என் வீட்டிலும் தங்கி இருந்ததாக சொல்லியுள்ளேன். என் சகோதரின் உதவியுடன் தான் என் மகனை படிக்கவைத்தேன். நான் ஒருநாள் கூட வி.களத்தூரில் 1ம் எதிர்மனுதாரருடன் இருக்கவில்லை.

13.வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு 1ம் எதிர்மனுதாரருக்கும் கஸ்டமரி டைவஸ் ஏற்பட்டபிறகு தான் 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரரை திருமணம் செய்து கொண்டார் என்றால் சரியல்ல. அந்த திருமணத்திற்கு பிறகு 3ம் எதிர்மனுதாரர் பிறந்து அவருக்கு 32 வயது ஆகிவிட்டது என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரருக்கு திருமணம் முடிந்து குழந்தைகள் உள்ளன என்றால் திருமணம் நடந்ததை பற்றி கேள்விப்பட்டேன்.

14. குழந்தைகளைப்பற்றி தெரியாது. என் மகனுக்கு ஒரு குழந்தை இருக்கிறது என்றால் சரிதான். நான் வி.களத்துரில் 1ம் எதிர்மனுதாரருடன் வசித்ததாகவும் அப்போது என்னையும் என் மகனையும் எதிர்மனுதாரர்கள் கொடுமைப்படுத்தியதாகவும் வழக்கிற்காக இட்டுகட்டி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

15.1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரை 2ம் திருமணம் செய்ததற்காக காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. மஙகலமேடு காவல்

நிலையத்தில் நான் 1ம் எதிர்மனுதாரரோடு வாழ முடியாது அவரிடம் ஏதேனும் வாங்கி கொடுக்கும்படிதான் நான் புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

16. இவரோடு நான் வாழமுடியாது என்று என் அண்ணன் கைப்பட எழுதி காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் போட்டேன் என்றால் இல்லை. 1ம் எதிர்மனுதாரருக்கு பூர்வீக சொத்து 1 ஏக்கர் 60 சென்ட் என்றால் சரிதான். அதை விவசாயம் செய்யாமல் தரிசாக கிடைக்கிறது என்றால் சரியல்ல.

17. அதை அவர் குத்தைக்கு விட்டு இருந்தார் நானும் சந்திராவும் சென்று பயிர் செய்யவிடாமல் தடுத்துவிட்டோம் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கு 1 ஏக்கர் 60 சென்ட் பூர்வீக நிலமும் தரிசு நத்தத்தில் கட்டிய வீடும்தான் உள்ளது என்றால் சரியல்ல. அவருக்கு வேறு சொத்துக்கள் கிடையாது.

18. வங்கியில் பணம் ஏதும் கிடையாது. அவர் மாற்றுதிறனாளி என்று அரசால் சான்று வழங்கப்பட்டு மாதம் தோறும் 1,000/-ரூபாய் பெறுகிறார் என்றால் இல்லை. சில நாட்களுக்கு முன்புதான் நானும் என் மகனும் வி.களத்தூருக்கு வந்து 1ம் எதிர்மனுதாரரின் பூர்வீக சொத்துகளிலும் 2ம் எதிர்மனுதாரர் பெயரில் அவர் மகனால் வாங்கி எழுதப்பட்ட சொத்துக்களை சேர்த்து பாகம் கேட்டு வழக்கு போட்டு அந்த வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் வழக்கு இருப்பது உண்மை.

19. என் கணவர் சம்பாதித்த சொத்துகளை பொறுத்துதான் வழக்கு போட்டுள்ளேன். 1ம் எதிர்மனுதாரர் என் மீது போட்ட விவகாரத்து வழக்கு போட்டு அது தற்போது மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் மனுவில் உள்ள சங்கதிகளை வழக்கறிஞருக்கு யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன்.

20.மனுவில் நான் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் வழக்கிற்காக சோடனை செய்யப்பட்டவை ஆகும் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரின் சொந்தமான வீட்டை விட்டு எதிர்மனுதாரர்களை விரட்டிவிட்டு வீட்டை பூட்டிவைத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர்களின் பொருட்களை போலீஸ் கேட்டுகொண்டதற்கிணங்க அவர்களுடைய வீட்டில் இருந்து நாங்கள் வெளியே வைத்தோம் என்றால் வைக்க சொன்னார்கள் வைத்தோம்.

21. அந்த பொருட்களை அவர்களே எடுத்து சொன்றுவிட்டார்கள் என்றால் சரிதான். இந்த மனு தாக்கல் செய்வதற்கு எனக்கு தகுதி இல்லை என்றாலும் 1ம் எதிர்மனுதாரர் மாறறு திறனாளி என்பதால் மாதம் மாதம் அரசு உதவி தொகை பெறுவதாலும் மனுவில் கேட்டுள்ள பரிகாரம் எதுவும் அவரால் கொடுக்கமுடியாது என்றாலும் சரியல்ல.

22. என் மகன் கோடிகோடிகாக சம்பாதித்து அதில் நான் வசதியாக வாழ்ந்துகொண்டு எதிர்மனுதாரரை வீட்டைவிட்டு விரட்டி அவர் மாற்று திறனாளி உதவி தொகை பெற்று வாழ்ந்துகொண்டு இருக்கும் நிலையில் வழக்கிற்காக வேண்டுமென்று பொய்யான காரணம் கூறி மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுபடி எந்த பரிகாரமும் கிடைக்க தகுதியல்ல இல்லை என்றால் சரியல்ல.

23. மனுவோடு சேர்த்து தாக்கல் செய்துள்ள சீதன பொருட்கள் பட்டியல்படி எந்த பொருளும் எதிர்மனுதாரரிடம் இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.